பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 76 நாள் : 07.06.2018

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் 2017–18ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிகளின் வளர்ச்சிக்காக ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான ஊக்கத்தொகையினை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் 2017–18ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 30 சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிகளின் வளர்ச்சிக்காக தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான ஊக்கத்தொகையினை இன்று (07.06.2018) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 70 சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 2017–18ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 2765 மாணவர்கள், 3143 மாணவியர்கள் என மொத்தம் 5908 மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுதினர். இதில் 2502 மாணவர்கள், 3014 மாணவியர்கள் என மொத்தம் 5516 மாணவ/மாணவியர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 93.36 ஆகும். இது கடந்த ஆண்டை விட 0.26 சதவீதம் அதிகமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசியர்கள், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ செல்வங்களை பாராட்டும் வகையில் அப்பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையில் தளவாடப் பொருள்கள் வாங்குவதற்கு ரூ.50,000/–மும், ஆசிரியர்கள் சுற்றுலா செல்வதற்கு ரூ.20,000/–மும், ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.15,000/–மும், மாணவர்களின் அத்தியாவசிய தேவைகளை மேம்படுத்த ரூ.15,000/–மும், பயன்படுத்தப்படுகிறது.

இதுவரை 2011–2012 கல்வியாண்டு முதல் 2016–2017 கல்வியாண்டு வரை சென்னைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகைகளின் விவரம் :

| வ.எண் | கல்வி ஆண்டு | 100% சதவீதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | 2011–2012 | 2 | 2 இலட்சம் |
| 2. | 2012–2013 | 1 | 1 இலட்சம் |
| 3. | 2013–2014 | 2 | 2 இலட்சம் |
| 4. | 2014–2015 | 22 | 22 இலட்சம் |
| 5. | 2015–2016 | 19 | 19 இலட்சம் |
| 6. | 2016–2017 | 20 | 20 இலட்சம் |

தற்பொழுது, 2017–2018ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி 30 பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிகளின் வளர்ச்சிக்காக தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.30 இலட்சம் ஊக்கத்தொகையினை இன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் மற்றும் உதவி கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**